**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
------------
**II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.**

**Sessions Case No. 25/2022**

Deposition of witness for : PW14

Name : உஷா பிரியா

Husband's Name : கிரி

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Law and recording the Deposition of the Witness on 21st day of January 2025.

21-01-2025

**1 முதல் 6 வரையிலான எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை:-**

நான் தற்போது ஐவேலி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலகராக பணிபுரிந்த வருகிறேன். கடந்த 11.08.2021 ம் தேதி சங்ககிரி வட்டம், அன்னதானப்பட்டி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலகராக பணிபுரிந்து வந்த போது அன்று குற்ற எண். 105/2021, சங்ககிரி காவல் நிலையத்திற்கு சம்மந்தப்பட்ட வழக்கு சம்மந்தமாக காவல் ஆய்வாளர் அவர்கள்

நடேசன் (எ) நாச்சிமுத்து மற்றும் அவரது மகன் ராமசாமி என்பவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்து விவரத்தை கோரியிருந்தார். கூட்டு பட்டா எண். 59 ல் சர்வே எண்கள். 31/2, 19/4, 11, 18/5, 20/13, 21/15, பட்டா எண் 137 ல் சர்வே எண்கள். 19/2,5,9A, 18/6, 20/7,8,10,12,14, 21/16, 17 பட்டா எண். 211 ல் சர்வே எண். 20/9, பட்டா எண். 244 ல் சர்வே எண். 21/18 ஆகிய நிலங்கள் கூட்டாக நடேசன் (எ) நாச்சிமுத்துவிற்கு பாத்தியப்பட்ட நிலம் என்றும், ராமசாமி என்பவருக்கு மேற்படி கிராமம் பட்டா எண். 109 ல் சர்வே எண். 19/7 பரப்பு 71 ஏர்ஸ் நிலம் பாத்தியப்பட்டது என்று நான் கிராம கணக்கில் உள்ளது என்று சான்று வழங்கினேன். நான் வழங்கிய சான்று **அ.த.சா.ஆ–P7** ஆகும். அது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சங்ககிரி காவல் நிலைய குற்ற எண். 105/2021 சம்மந்தப்பட்ட வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

ஓம்/– A.M. ரவி,
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.